# வுளூச் செய்யும் முறை

**01. வுளூச் செய்யும் தண்ணீரை மூடி வைக்க வேண்டும்.**

"வுளூச் செய்யும் தண்ணீரை மூடி வைக்கும் படி அல்லஹ்றவின் தூதர் நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு கட்டளை பிறப்பித்தார்கள்." (இப்னு குஸைமா)

**02. காலையில் தூங்கி எழுந்ததும் (வுளூச் செய்யும்) தண்ணீர்ப் பாத்திரத்தினுள் கையை நுழைவிப்பதட்கு முன்னர் மூன்று முறை (பாத்திரத்தின் வெளியே) அதனை கழுவிக் கொள்ள வேண்டும்.**

அல்லாஹ்றவின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :
" உங்களில் ஒருவர் தன் தூக்கத்தில் இருந்து எழுந்தால், அவர் தன் கரத்தை மூன்று விடுத்தங்கள் கழுவாதவரை பாத்திரத்தினுள் அமிழ்த்த (போட) வேண்டாம்."
(ஸஹீஹ் முஸ்லிம் : 467)

**03. வுளூச் செய்வதற்கு முன்னர் பிஸ்மில்லாஹ் என்று கூறிக் கொள்ள வேண்டும்.**

அல்லாஹ்றவின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"பிஸ்மில்லாஹ்" எனக் கூறி வுளூச் செய்யுங்கள். ( நஸாஇ)

**குறிப்பு** :
வுளூவில் "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் " என்று பூரணமாக ஓதுவதற்கு எந்த வித ஆதாரமும் கிடையாது.

**04. பிறகு வலது கையினால் ஒரு பிடி தண்ணீர் எடுத்து இரண்டு கைகளினதும் மணிக்கட்டுவரை நன்றாக தூய்மையாகிவிட்டது என்று கருதும் வரை தேய்த்துத் தேய்த்துக் கழுவ வேண்டும். விரல்களுகிடையிலும் குடைந்து விட வேண்டும். இவ்வாறு கைகளை மூன்று முறை கழுவ வேண்டும்.**

“தங்கள் இரு மணிக்கட்டுகளையும் (அதாவது இரு மணிக்கட்டு வரையிலான பகுதிகளையும்) மூன்று முறை கழுவினார்கள். (ஸஹீஹுல் முஸ்லிம் : 383)

“தங்கள் இரு மணிக்கட்டுகளையும் (அதாவது இரு மணிக்கட்டு வரையிலான பகுதிகளையும்) தூய்மையாகும் வரை கழுவினார்கள். (திர்மிதி)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
“இரண்டு விரல்களுக்குமிடையில் குடைந்து விடு.
(திர்மிதி, இப்னு குஸைமா)

“உனது கை மற்றும் இரு கால்களின் விரல்களுக்குமிடையில் குடைந்து விடு. (அஹ்மத், திர்மிதி)

**05. பிறகு வலது கையில் ஒரு பிடி தண்ணீர் எடுத்து கொஞ்சம் நீரை வாய்க்குச் செலுத்தி, கொப்பளிக்க வேண்டும். மீதமான நீரை நன்றாக மூகிட்கு செலுத்த வேண்டும். நோன்பாளியாக இருந்தால் மூக்கிற்கு தண்ணீர் செலுத்தும் விடயத்தில் கடப்புச் செய்யாக் கூடாது. பிறகு இடது கையினால் மூக்கை சீறி விட்டு, மிஸ்வாக் செய்திருக்கா விட்டால், வாயை விரல்களினால் அல்லது மிஸ்வாக்கினால் சுத்தப் படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு மூன்றுமுறை செய்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறையும் கொஞ்சம் நீரினால் வாய் கொப்பளிப்பது, மீதமாக இருக்கக் கூடிய நீரை நாசிக்கு செலுத்த வேண்டும்.**

**குறிப்பு:** வாய் கொப்ப வெவ்வேராக தண்ணீர் எடுக்க வேண்டும் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

“ ஒரு பிடி நீரின் மூலம் வாய் கொப்பளித்து, நாசிக்கு செலுத்தினார்கள். இவ்வாறு மூன்று முறை செய்தார்கள். (ஸஹீஹுள் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்: 398)

“மூன்று பிடி நீரின் மூலம் மொன்று முறை வாய்க் கொப்பளித்து, மூன்று முறை நாசிக்கு நீர் செலுத்தி, மூன்று முறை அதனை சீறி விட்டார்கள்.
(ஸஹீஹுள் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்: 398)

“பிறகு தன் வலது கரத்தை வுளூச் செய்யும் பாத்திரத்தினுள் நுழைத்து பிறகு வாய் கொப்பளித்து, நாசிக்கு நீர் செலுத்தினார்கள். (ஸஹீஹுள் புகாரி: 164)

“ஒரு பிடி தண்ணீர் அள்ளி வாய் கொப்பளித்து, நாசிக்கும் செலுத்தினார்கள். (இப்னு குஸைமா)

“பிறகு தனது வலது கரத்தை பாத்திரத்தினுள் நுழைத்து, வாய் கொப்பளித்து, நாசிக்கு நீர் செலுத்தி, தன் இடது கையினால் சீறி விட்டார்கள். இவ்வனைத்தையும் மூன்று முறை செய்தார்கள். (அஹ்மத், நஸாஇ, அபூதாவுத்)

“தன் வாயினுள் (நீரை) நிறைத்து வாய் கொப்பளிப்பது நாசிக்கு நீர் செலுத்தி, தன் இடது கையினால் மூன்று விடுத்தம் சீறி விட்டார்கள். (இப்னு குஸைமா)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
“நீ நோன்பாளியாக இருந்தாலே தவிர, நீர் செலுத்தும் போது கடப்புச் செய். (அஹ்மத், அபூதாவுத், நஸாஇ, இப்னு ஹிப்பான், இப்னு குசைலமா)
“தனது சில விரல்களை வாயினுள் நுழைத்தார்கள்.
(அஹ்மத்)

“பல் துலக்குவதற்கு விரல் போதுமாகும்.
(அஹ்மத்)

**06. பிறகு வலது கையினால் ஒரு பிடி நீர் எடுத்து இரண்டு கைகளையும் ஒன்றிணைத்து முகத்தைக் கழுவ வேண்டும். கழுவும் பொது கண் குழிகளைத் தேக்க வேண்டும். இந்த அமைப்பில் முகத்தை மூன்று முறை கழுவ வேண்டும்.**

“பிறகு ஒரு பிடி நீர் எடுத்து இவ்வாறு இணைத்தார்கள். (அதாவது தனது வலது கரத்தை) அதனை தனது மற்ற கரத்தோடு இணைத்து அவ்விரண்டின் மூலமாக தனது முகத்தை கழுவினார்கள். (ஸஹீஹுல் புகாரி: 140)

“பிறகு தன் கரத்தை பாத்திரத்தினுள் நுழைத்து தன் முகத்தைக் கழுவினார்கள். (ஸஹீஹுல் புகாரி: 102 )

“அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இரு கண் குழிகளையும் தேய்க்கக் கூடியவர்களாக இருந்தார்கள்.
(அஹ்மத், அபூதாவூத்)

“பிறகு தனது வலது கரத்தை பாத்திரத்தினுள் நுளைத்த்து தன் முகத்தை மூன்று முறைக கழுவினார்கள்.
(அஹ்மத்)

**07. பிறகு சிறிதளவு தண்ணீரை எடுத்து தாடையின் கீழ செலுத்தி தாடியை மொன்று விடுத்தம் கோரி விட வேண்டும்.**

“வுளூச் செய்தார்கள். தன் தாடியை அதன் கீழ புறத்திலிருந்து தன் விரல்களினால் குடைந்து விட்டார்கள்.
(ஹாகிம்)

“தன் தாடியைக் குடைந்து விடக் கூடியவர்களாக இருந்தார்கள்.
(திர்மிதி)

“தன் தாடியை மூன்று முறைக குடைந்து விடுவார்கள்.
(ஹாகிம், இப்னு குஸைமா)

“தண்ணீரைக் கொண்டு தன் தாடியைக் குடைந்து விட்டார்கள்.
(அஹ்மத்)

**08. பிறகு ஒரு பிடி தண்ணீர் எடுத்து வலதுக் கையை அதனது முழங்கை வரை அல்லது அதனை விட உயர்த்திக் கழுவ வேண்டும். இவ்வாறு மூன்று முறைக கழுவ வேண்டும். அதன் பிறகு ஒரு பிடி தண்ணீர் எடுத்து இடது கையை அதனது முழங்கை வரை அல்லது அதனை விட உயர்த்திக் கழுவ வேண்டும். இவ்வாறு மூன்று முறைச் செய்ய வேண்டும்.**

"பிறகு தன் முகத்தையும் தன் இரு கரங்களையும் முழங்கை வரை மும்மூன்று முறைக் கழுவினார்கள்.
(ஸஹீஹுள் புகாரி: 159, ஸஹீஹ் முஸ்லிம்: 384)

"தனது வலது கரத்தை தொல் புஜம் வரை உயர்த்திக் கழுவினார்கள். பிறகு தனது இடது கரத்தை தொல் புஜம் வரை உயர்த்திக் கழுவினார்கள்.
(ஸஹீஹ் முஸ்லிம்: 414)

"பிறகு ஒரு பிடி நீர் எடுத்து அதன் மூலம் தனது வலது கரத்தைக் கழுவினார்கள். அதன் பிறகு ஒரு பிடி நீர் எடுத்து அதன் மூலம் தன் இடது கரத்தைக் கழுவினார்கள்.
(ஸஹீஹுள் புகாரி: 140)

**09. இரு கரங்களையும் நன்கு தேய்த்துக் கொள்ள வேண்டும்.**

"தனது இரு கரங்களையும் நன்கு தேய்த்து வுளூச் செய்தார்கள்.
(ஹாகிம்)

**10. பிறகு வலது கையில் ஒரு பிடி நீர் எடுத்து இரு கரங்களையும் நனைத்து அதன் பிறகு இரு கரங்களின் மூலம் தலையின் அனைத்து பகுதியையும் தடவ வேண்டும். இரு**

**கரங்களையும் நெற்றியில் வைத்து பிடரி வரை எடுத்துச் சென்று மீண்டும் இரு கரங்களையும் நெற்றி வரை எடுத்து வர வேண்டும்.**

“பிறகு தன் இரு கரங்களின் மூலம் தன் தலையைத் தடவினார்கள். தன் தலையின் முற் பகுதியைக் கொண்டு ஆரம்பித்து அவ்விரண்டையும் (இரு கரங்களையும்) தன் பிடரி வரை எடுத்துச் சென்றார்கள். அந்த இடத்திலிருந்து மீண்டும் மீட்டி, அவ்விரண்டையும் கொண்டு வந்தார்கள்.
(ஸஹீஹுள் புகாரி: 185)

“தன் இரு கன்னங்களிலும் எஞ்சியிருக்கக் கூடியதல்லாத புதிய நீரைக் கொண்டு தன் தலையை மஸ்ஹ் செய்தார்கள்.
(ஸஹீஹ் முஸ்லிம்: 399)

“பிறகு ஒரு பிடி நீர் எடுத்து அதனை தன் இடது கையில் ஊற்றி பிறகு தன் தலையை மஸ்ஹ் செய்தார்கள்.
(ஸஹீஹுள் புகாரி: 140)

“தனது வலது கரத்தை பாத்திரத்தினுள் நுழைத்து.......... பிறகு இடது கரத்தினால் தடவி, அதன் பிறகு தனது இரு கரங்களையும் கொண்டு தன் தலையை ஒரு முறை மஸ்ஹ் செய்தார்கள்.
(அஹ்மத் - இப்னு குஸைமா)

**11. பிறகு பெரு விரல் மற்றும் சுட்டு விரலைத் தண்ணீரினால் நனைத்து, சுட்டு விரலைக் காதின் துவாரத்தினுள் நுழைத்து அந்த சுட்டு விரலினால் காதின் உட்புறத்தை மஸ்ஹ் செய்ய**

**வேண்டும். பெரு விரலின் மூலம் காதின் புறத்தை மஸ்ஹ் செய்ய வேண்டும்.**

“எந்த நீரைக் கொண்டு தலையை மஸ்ஹ் செய்தார்களோ, அந்த நீர் தன் இரு காதுகளுக்காக வேண்டியும் வேறு நீர் எடுத்தார்கள்.
(ஹாகிம்)

“தனது இரு சுட்டு விரல்களையும் தன் இரு காதுகலினுள் நுழைந்தார்கள். தனது இரு பெரு விரல்களைக் கொண்டு இரு காதுகளின் வெளிப்புரங்களையும், இரு சுட்டு விரல்களைக் கொண்டு தன் இரு காதுகளின் உட்புறங்களையும் மஸ்ஹ் செய்தார்கள்.
(அபூதாவூத்)

“தன் இரு காதுகளின் துவாரங்களினுள் தன் இரு விரல்களை நுழைத்தார்கள்.
(அபூதாவூத்)

“தனது இரு இரு விரல்களையும் அவ்விரண்டினுள் (காதுகளினுள்) நுழைத்தார்கள்.
(இப்னு குஸைமா)

“இரு சுட்டு விரல்களைக் கொண்டு அவ்விரண்டினது உடௌரங்களையும் தனது இரு பெரி விரல்களைக் கொண்டு அவ்விரண்டினதுப வெளிப்புரங்களையும் மஸ்ஹ் செய்தார்கள்.

(நஸாஇ)

**12. பிறகு வலது கையினால் வலது காலில் தண்ணீரை ஊற்றி இடது கையினால் கரண்டிக் கால வரை அல்லது அதனை விட உயர்த்தி நன்கு தேய்த்துக் கழுவ வேண்டும். இடது கையின் சின்னி விரலினால் முதலில் வலது காலின் சின்னி விரல் இடுக்கிலிருந்து குடைய வேண்டும். பிறகு இடது காலின் பெரு விரலிடுக்கிளிருந்தும் விரல்களுக்கிடையில் குடைய வேண்டும். இவ்வாறு வலது காலை மூன்று விடுத்தமும் இடது காலை மூன்று விடுத்தமும் கழுவ வேண்டும்.**

“பிறகு கரண்டைக் கால் வரை தன் இரு கால்களையும் மூன்று முறைக கழுவினார்கள்.
(ஸஹீஹுள் புகாரி: 159)

“பிறகு தனது வலது காலை இரு கரண்டைகள் வரை மூன்று முறை கழுவினார்கள். அதன் பிறகு இடதையும் அது போன்றே கழுவினார்கள்.
(ஸஹீஹ் முஸ்லிம்: 383)

“பிறகு தனது வலது காலை குதிரை முகம் வரைக்கும் உயர்த்திக் கழுவினார்கள். அதன் பிறகு தன் இடது காலை குதிரை முகம் வரைக்கும் உயர்த்திக் கழுவினார்கள்.
(ஸஹீஹ் முஸ்லிம்: 414)

“பிறகு தனது வலது கையை பாத்திரத்தினுள் நுழைத்து தனது வலது காலின் மீது (நீரை) ஊற்றி, தனது இடது கரத்தைக் கொண்டு அதனை மூன்று முறை கழுவினார்கள். அதன் பிறகு

தனது வலது கையினால் தனது இடது பாதத்தின் மீது (நீரை) ஊற்றி, தனது இடது கரத்திநாள் அதனை மூன்று முறைக கழுவினார்கள்.
(அஹ்மத் - இப்னு குஸைமா)

“தன் இரு கால்களையும் அவ்விரண்டும் தூய்மையாகும வரை (நன்கு தேய்த்துக்) கழுவினார்கள்.
(ஸஹீஹ் முஸ்லிம்: 399)

“தனது சின்னி விரலின் மூலம் தனது இரு கால்களின் விரல்களுக்கிடையில் குடைந்தார்கள்.
(பைஹகீ, அபூதாவூத்)

“நபி (ஸல்) அவர்கள் தனது துப்பரவு, தலை வாருதல், செருப்பணிதல் போன்ற ஒவ்வரு காரியத்திலும் முடியுமான வரை வலதை விரும்பக் கூடியவர்களாக இருந்தார்கள்.
(ஸஹீஹுல் புகாரி: 426)

“தன் இரு பாதங்களின் விரல்களுக்குமிடையில் மூன்று முறைக் குடைந்தார்கள்.
(தாரகுத்னி)

**13. பிறகு ஒரு பிடி தண்ணீர் எடுத்து தன் அபத்தில் தெளித்துக் கொள்ள வேண்டும்.**

“ஒரு பிடி தண்ணீர் எடுத்து அதனைத் தன் அபாத்திட்குத் தெளித்தார்கள்.
(அஹ்மத்)

**14. பிறகு பின்வரும் வார்த்தைகளைக் கூற வேண்டும். இந்த வார்த்தைக் கலைக் கூறுவதன் மூலம் அவருக்காக சுவனத்தின் எட்டு வாயல்களும் திறந்து விடப்படுகின்றன.**

## அஷ்ஹது அல்லா இலாக இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீகலஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூளுஹு.

**பொருள்:** அல்லாஹ்வைத் தவிர (தகுதியான) இலாஹ் எவரும் இல்லை என்றும் அவன் தனித்தவன் அவனுக்கு கூட்டாக எவரும் இல்லை என்றும் நான் சான்று பகர்கிறேன். மேலும் நான், நிச்சயமாக முகம்மத் (ஸல்) அவர்கள் அவனது அடியாரும், அவனது தூதரும் ஆவார்கள் என்றும் சான்று பகர்கிறேன்.

“எவர் வுளூச் செய்து “அஷ்ஹது........ என்று ஒதுகின்றார்களோ, அவருக்காக சுவனத்தின் எட்டு வாயில்களும் திறக்கப் படுகின்றன. அவர் தான் நாடியதன் மூலம் நுழைந்துக் கொள்வார். (ஸஹீஹ் முஸ்லிம்: 397)

**இன்னும்**

**சுபானகல்லாஹும்மா வபிஹம்திக அஷ்ஹது அன்லாஇலாஹா இல்லா அந்த அஸ்தவ்பிருக வஅதூபி இலைக்**

**பொருள்:** யா அல்லாஹ்! நீ தூய்மையானவன், மேலும் நீ, உன் புகழைக் கொண்டு (அணைத்து பலாஈனங்களிளிருந்தும் தூய்மையானவன்.) உன்னைத் தவிர எந்த இலாஹும் இல்லையென்று நான் சான்று பகர்கிறேன். நான் உன்னிடத்திலே பாவ மன்னிப்புத் தேடுகிறேன். நான் உன்னின் பாலே மீளுகிறேன்.

“எவரொருவர் வுளூச் செய்து அவன் தன் வுலூவிளிருந்து முற்றுப் பெற்றதன் பிறகு ‘சுப்கானகள்ளஹும்மா...... என்று ஓதுகின்றாரோ, அது ஒரு வெள்ளை தாளில் எழுதப்பட்டு பிறகு மறுமை நாள் வரை உடைக்கப் படாமல் இருக்கும் பொருட்டு சீல் வைக்கப் படுகிறது. (நஸாஇ, ஹாகிம், இப்னு சுன்னி)

**15. வுளூச் செய்ததன் பிறகு துணியினால் முகத்தை துடைத்துக் கொள்ள முடியும்.**

“வுளூச் செய்ததன் பிறகு (முகத்தை) துடைப்பதற்கு ரசூளுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு ஒரு துணி இருந்தது. (திர்மிதி)